# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம
# Department of Treasury Operations

මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය, තැ.පෙ. 1559, කොළඹ 01.
பொதுத்திறைசேரி, நிதி திட்டமிடல் அமைச்சு, த.பெ.இல.1559, கொழும்பு 01.
General Treasury, Ministry of Finance & Planning, P.O.Box: 1559, Colombo 01.

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General: 0094 112 484729, dgto@tod.treasury.gov.lk
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 0094 112 484970
පොදු / பொது / General: 0094 112 484500, 0094 112 484600


මගේ අංකය / எனது இல / My No.: திசெதி/டி/சீஎம்/2012
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Date: 20.11.2012

திறைசேரிச் செயற்பாடுகள் சுற்று நிருப இல.: 5/2012

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள் மற்றும்

மாவட்டச் செயலாலாளர்கள்.

**2012ஆம் ஆண்டிற்கான காசுப் புத்தகங்களை மூடுதலும், கட்டுநிதிக் கணக்குகளைத் தீர்த்தலும்**

2012ஆம் ஆண்டின் முடிவில் காசுப் புத்தகத்தினை மூடுகின்ற போதும், கட்டுநிதிக் கணக்கினைத் தீர்க்கின்ற போதும் கீழ்க் காணப்படுகின்ற படிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் உரிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**1. 2012 டிசம்பர் மாதத்திற்கான கட்டுநிதி விடுவித்தல்**

1.1 2012 டிசம்பர் மாதத்திற்கான மீண்டெழும் செலவினங்கள் மூலதனச் செலவினங்களுக்கான கட்டுநிதி 2012 டிசம்பர் 20ஆம் திகதிக்கு முன்னர் விடுவிப்பதற்கு இத்திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். எனவே 2012 வருடத்தில் கொடுபட வேண்டியுள்ள மீண்டெழும் (சம்பளம் உட்பட) மூலதனச் செலவினங்களுக்காக தேவையான கட்டுநிதியைப் பெறுவதற்கு 2012 நவம்பர் 29ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இத்திணைக்களத்திற்கு விண்ணப்பிக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன். வேண்டிய கட்டநிதியைக் கணக்கிடும் பொழுது தற்போது செலுத்த வேண்டியுள்ள பொறுப்புக்கள் டிசம்பர் மாதத்தில் செலுத்த வேண்டியவை ஆகியவற்றை சரியாகக் கணக்கிடுவதுடன் மீதமாயுள்ள ஒதுக்கீடுகளைக் கவனத்திற் கொள்ளுமாறும் கீழே 2.1.1ல் காட்டப்பட்டுள்ளவாறு காசு மீதியை மிகக் குறைந்தளவிலோ அல்லது "0" பூச்சியமாகவோ பேணிக் கொள்ளும் பொறுப்புடன் கட்டுநிதிக்கு விண்ணப்பிக்கும் போது கவனம் செலுத்தவும். சமர்ப்பிக்கப்படும் கட்டுநிதி விண்ணப்பங்கள் யாவும் கவனத்தில் கொள்ளப்பட்டு 2012.12.20 க்கு முன்னர் முன்னுரிமை அடிப்படையில் கட்டுநிதியை விடுவிக்க இத்திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். விசேட காரணங்களேதும் இருந்தாலன்றி 2012.12.20 க்குப் பின்னர் 2012ஆம் ஆண்டுக்கான கட்டுநிதி விடுவிக்கப்பட மாட்டாது.

1.2 நி.பி. 215 (3) (அ) இன் ஏற்பாடுகளின் பால் தங்களின் விசேட கவனத்தை ஈர்ப்பதுடன் நி.பி. 215 (3) (இ) இன் கீழ் வருகின்ற பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக மாத்திரம் ஒதுக்கீடுகளை வைப்புக் கணக்கிற்கு மாற்றுவதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் சிபார்சு செய்கின்றது.

**2. 2012 டிசம்பர் 31 அன்று காசுப் புத்தகத்தை மூடுதல்**

2.1 2012 ஆம் ஆண்டின் காசுப்புத்தகம் 2012 டிசம்பர் 31ம் திகதி முடிவில் பின்வரும் படிமுறைகளுக்கமைய மூடப்படுதல் வேண்டும்.

அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் பொறுப்புவாய்ந்த பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு அவரின் அலுவலகத்திலும், உப-அலுவலகங்களிலும் காணப்படும் காசுப் புத்தகங்களை மூடுவதற்கான அதிகாரத்தினைப் பெயர் குறிப்பிட்டு ஒப்படைப்பதுடன், அத்தகைய அதிகார ஒப்படைப்பின் பிரதியொன்றினைக் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும். இப் பெயர் குறிப்பிட்ட உத்தியோகத்தர் 2012ம் ஆண்டிற்கான கணக்குகளை 31 டிசம்பர் 2012 திகதியன்று பூர்த்தி செய்தல் வேண்டும். அதன் பின்னர் எதுவித நிதிசார் கொடுக்கல் வாங்கல்களையும் 2012ஆம் ஆண்டிற்காக மேற் கொள்ளலாகாது. சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்ப தொடர்ந்தும் காசேடுகளை பயன்படுத்தும் அலுவலகங்கள் 31.12.2012 ம் திகதியின் பின்னர் எதுவித நிதிசார் கொடுக்கல் வாங்கலையும் 2012ம் ஆண்டுடன் தொடர்புடைய காசேடுகளில் பதிவதற்கு முடியாதவாறு காசுப்புத்தகத்தின் கடைசிப் பதிவின் கீழ் சிவப்புக் கோடொன்றினை வரைந்து கொள்வதுடன், அவரது கையொப்பத்தினையிட்டு சிவப்புக் கோட்டின் கீழ் அவரது பெயரினையும் பதவியினையும் மற்றும் திகதி, நேரம் என்பவற்றினையும் குறிப்பிடுதல் வேண்டும்.


*Additional Director General (Cash Flow & Consolidated Fund Management)* — Tel: 0094 112 484748, chandrawa tod.treasury.gov.lk
*Additional Director General (Debt. Servicing & Accounting)* — Tel: 0094 112 484738, Fax: 0094 112 320042
*Director (Cash Management)* — Tel: 0094 112 484994
*Director (Debt. Servicing & Accounting)* — Tel: 0094 112 484750
*Director (Cash Flow & Fund Management)* — Tel: 0094 112 484901
*Director (Revenue)* — Tel: 0094 112 484638

2.2 2.2.1 அமைச்சுக்கள் மற்றும் உப அலுவலகங்களைக் கொண்டிராத திணைக்களங்கள் 31.12.2012 அன்றுள்ளவாறான காசுப் புத்தக மீதியினை உறுதிப்படுத்தும் படிவம் ரீஓடி/ஐஎம்பி/06 ஐ பூரணப்படுத்தி 02 ஜனவரி 2013 அன்று சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையில் சமர்ப்பிப்பதோடு வங்கியால் வழங்கப்படும் வரவுத் தகவல் குறிப்பின் (Bank Debit Advice) அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றினையும் படிவம் ரீஓடி/ஐஎம்பி/06 இன் பிரதியையும் இத் திணைக்களத்திற்கு விரைவாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

2.2.2 உப அலுவலகங்களைக் கொண்டுள்ள அமைச்சுக்கள்" திணைக்களங்கள்"மாவட்ட செயலகங்கள் 31.12.2012 அன்றுள்ளவாறான காசுப் புத்தக மீதி தொடர்பாக 2.2.1 இன் பிரகாரம் செயற்பட்டு 03 ஜனவரி 2013 அன்று சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையில் சமர்ப்பிப்பதோடு வங்கியால் வழங்கப்படும் வரவுத் தகவல் குறிப்பின் (Bank Debit Advice) அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றினையும் படிவம் ரீஓடி/ஐஎம்பி/06 இன் பிரதியையும் இத் திணைக்களத்திற்கு விரைவாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**குறிப்பு :** ரீஓடி/ஐஎம்பி/06 படிவத்தைப் புரணப்படுத்தும் போது தங்களது வங்கிக் கணக்குகள் இலங்கை வங்கியில் செயற்படுமிடத்து இலங்கை வங்கியிலுள்ள" பிரதி திறைசேரிச் செயலாளரின் கணக்கில் செலவுக்கும், வங்கிக் கணக்குகள் மக்கள் வங்கியில் செயற்படுமிடத்து மக்கள் வங்கியிலுள்ள பிரதி திறைசேரிச் செயலாளரின் கணக்கில் செலவுக்கும் ஏற்புடையதாக தேவையற்ற சொற்களை வெட்டி விடவும். ரீஓடி/ஐஎம்பி/06 மற்றும் ரீஓடி/ஐஎம்பி/07 படிவங்களை திணைக்கள இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். (www.treasury.gov.lk)

இத்திணைக்களத்தால் 2013 ஜனவரி முதலாவது வேலைநாளில் ஆரம்ப கட்டுநிதி விடுவிக்கப்படவிருப்பதால், எந்தவொரு அமைச்சும், திணைக்களமும் கட்டுநிதியின் எந்தவொரு பகுதியினையும் பிடித்து வைத்திருக்கவேண்டியதில்லை. வருட முடிவில் காசுப் புத்தக மீதி இல்லாது இருப்பினும் கூட வெற்று அறிக்கையினை திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

2.3 **ஆரம்ப கட்டுநிதி தவிர்ந்த, அதற்குப் பின்னரான விடுவிப்புக்கள் 2.2 பந்தியில் குறிப்பிட்டுள்ள வேண்டுதல்களை திருப்திப்படுத்திய பின்னர்தான் அமைச்சுக்கள், திணைக்களங்கள் அல்லது மாவட்ட செயலகங்களுக்கு திறைசேரியினால் மேற்கொள்ளப்படும் என்பதனை தயவுசெய்து குறித்துக்கொள்ளவும்.**

2.4 31 டிசம்பர். 2012 அன்று கட்டுநிதியினை திறைசேரிக்கு அனுப்பிவைக்கக்கூடியவகையில். உப-அலுவலகங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டுநிதிகளை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக தேவைப்படும் முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். 31.12.2012 அன்று உப-அலுவலகங்களிலுள்ள காசு மீதிகளை வசூலிக்கும் போது 2.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள முறை போன்ற வசதியான முறைமையொன்றினை பின்பற்றுவதற்கு வங்கியுடன் கலந்தாலோசிப்பீர்கள் என நம்பப்படுகின்றது.

2.5 **கட்டுநிதியினை தீர்த்துக்கொள்ளுதல் - மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி - 7003/0/0/......./12.**

2.5.1 மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி கட்டுநிதிக் குறியீடு 7003/0/0/..../12 இன் கீழ் திட்ட அலுவலகங்கள் பெற்றுக்கொண்ட கட்டுநிதியில் 31.12.2012 அன்றுள்ளவாறான காசுப் புத்தக மீதியினைக் குறிப்பிட்டு படிவம் ரீஓடி/ஐஎம்பி/07 இனை பூரணப்படுத்தி 01 ஜனவரி 2013 அன்று சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையில் சமர்ப்பிப்பதோடு வங்கியால் வழங்கப்படும் வரவுத் தகவல் குறிப்பின் (Bank Debit Advice) அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றினையும் படிவம் ரீஓடி/ஐஎம்பி/07 இன் பிரதி மற்றும் இணைப்ப 01 கீழ்வரும் விலாசத்திற்கு விரைவாக அனுப்புவதுடன் அதன் பிரதியொன்றினை நேர்வரிசை (Line) அமைச்சுக்கு அனுப்பவைக்க வேண்டும்.

திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம்
(கடன்சேவைகள் மற்றும் கணக்கீடுகள்)
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்,
கொழும்பு 01.

2.5.2 தங்களது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு வலைப்பின்னல் வசதியற்ற மக்கள் வங்கி கிளையில் செயற்படுமாயின், மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி கட்டுநிதிக் குறியீடு 7003/0/0/..../12, இன் கீழ் 31.12.2012 அன்றுள்ள காசுப் புத்தக மீதியினை “திறைசேரிப் பிரதிச் செயலாளர்” இன் பெயருக்கு எழுதப்பட்ட காசோலை மூலம் இணைப்பு 01 மற்றும் 03 உடன் 2.5.1 இல் உள்ள விலாசத்திற்கு விரைவாக அனுப்புவதுடன் அதன் பிரதியொன்றினை நேர்வரிசை (Line) அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

2.5.3 மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி தவிர்ந்த ஏனைய பெறுகைகள் கட்டுநிதிக் குறியீடு 7003 இன் கீழ் கணக்கு வைக்கப்பட முடியாததால், ஏனைய பெறுகைகள் கட்டுநிதிக் குறியீடு 7002 இன் கீழ் கணக்கு வைக்கப்படல் வேண்டும்.

2.6 முன்னைய வருடங்களில் நிலுவையாகவுள்ள கட்டுநிதிகளைச் செலுத்தாமை மற்றும் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கும் அரச கணக்குகள் திணைக்களத்திற்கும் அனுப்பவேண்டிய அறிக்கைகள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்காமை போன்ற தவறுகள் கட்டுநிதியினை தற்காலிமாக நிறுத்தி வைப்பதற்கு வழிவகுக்கும் என்பதனை தயவுசெய்து குறித்துக்கொள்ளவும்.

3. இவ்விடயங்கள் குறித்து ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் அவசியமானவிடத்து தயவுசெய்து கீழ்வரும் உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொள்ளவும்.

ஏனைய பகுதிகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்

| உத்தியோகத்தரின் பெயர் | பகுதி | தொலைபேசி |
|---|---|---|
| செல்வி. கே.எஸ். தயாரத்ன<br>உதவிப் பணிப்பாளர் | பாதுகாப்பு, மற்றும் சட்ட அமுலாக்கல் | 2484739 |
| திரு. எஸ்.ஏ.எஸ். விக்கிரமரத்ன<br>பணிப்பாளர் | கட்டமைப்பு அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு சுற்றாடல் | 2484743 |
| திருமதி. என்.பி.ஏ.ஆர். ஜெயவர்த்தன<br>பிரதிப் பணிப்பாளர் | அரச சேவை | 2484744 |
| திருமதி. ஐ.ரி.கே. இலங்கமுதலி<br>பிரதிப் பணிப்பாளர் | மனிதவள ஆராட்சி மற்றும் அபிவிருத்தி. | 2484740 |
| திரு. அஜந்த கல்ஹேன<br>பிரதிப் பணிப்பாளர் | உண்மைப் பொருளாதாரம் | 2484742 |
| திரு. ஜீ.எஸ். குமார<br>பிரதிப் பணிப்பாளர் | மீளளிக்கக்கூடிய வெளிநாட்டுக் கடன்கள் | 2484751 |

ஒப்பம்: எம்.எஸ்.டி. றணசிறி
பணிப்பாளர் நாயகம்
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்

பிரதிகள் :
1. கணக்காய்வாளர் நாயகம்
2. அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம்
} தகவலுக்காக.
3. திட்டப் பணிப்பாளர்கள் - தயவு செய்து 2.5 இன் பிரகாரம் செயற்படுவதற்காக
4. பொது முகாமையாளர் – இலங்கை வங்கி
5. பொது முகாமையாளர் – மக்கள் வங்கி
} பந்தி 2.2.1, 2.2.2 மற்றும் 2.5.1 இல் குறிப்பிட்டுள்ள பெறுகைகள் தொடர்பில் வசதிகளை ஏற்பாடு செய்வதில் ஒத்துழைப் பினை வழங்க வேண்டப்படுபவர்கள்.

படிவம் 01

**31.12..2012 அன்று உள்ளவாறான கட்டுநிதி இணக்கக் கூற்று**

1. அமைச்சு /திணைக்களம் :-
2. கட்டுநிதிக் கணக்கு இல :-
3. கருத்திட்டம் :-

| மாதம் | பெற்றுக் கொண்ட கட்டுநிதி | | | செலவினம் | | | மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீவெஉ (1) | (2) | மொத்தம் (3) | மீவெஉ (4) | உநி (5) | மொத்தம் (6) | மீவெஉ (1-4) | உநி (2-5) | மொத்தம் (3-6) |
| ஜனவரி | | | | | | | | | |
| பெப்ரவரி | | | | | | | | | |
| மார்ச்சு | | | | | | | | | |
| ஏப்பிரல் | | | | | | | | | |
| மே | | | | | | | | | |
| ஜூன் | | | | | | | | | |
| ஜூலை | | | | | | | | | |
| ஓகஸ்ட் | | | | | | | | | |
| செப்ரெம்பர் | | | | | | | | | |
| ஒக்ரோபர் | | | | | | | | | |
| நவம்பர் | | | | | | | | | |
| டிசம்பர் | | | | | | | | | |
| மொத்தம் | | | XXX | | | XXX | | | |

வருடகாலப்பகுதியில் பெற்றுக்கொண்ட மொத்தக் கட்டுநிதி (3) XXX

வருடத்திற்கான மொத்தச் செலவினம் (6) XXX

31.12.2012 இல் உள்ளவாறான மீதி ......

தீர்க்கப்படாத முற்பணங்கள் (ஏதேனும் இருப்பின்)

முற்பணத் திகதி:- நிறுவனம்:- காரணம்:- தொகை - ரூபா.

படிவம் : **TOD/IMP/06**

எனது இலக்கம் :- ..........................

திகதி :- ......................................

முகாமையாளர்,
இலங்கை வங்கி/மக்கள் வங்கி.

ஐயா,

**காசுப்புத்தகத்தில் உள்ள மேலதிக தொகையினை**
**திறைசேரிக்கு திருப்பியனுப்புதல்**
**நடைமுறைக் கணக்கு இலக்கம்...............**

அமைச்சு/திணைக்களம்/மாவட்டச் செயலகம் :- .......... ....................................

கட்டுநிதிக் கணக்கு இலக்கம்:- 7002/0/0/…../….

20 .12.31 அன்று இவ்மைச்சின்/திணைக்களத்தின்/மாவட்டச்செயலாளர் அலுவலகத்தின் காசுப்புத்தகதிற்கு ஏற்ப மீதியாகவுள்ள ரூபா .....................வினை *இலங்கை வங்கி தப்பிரபேன் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச்செயலாளரின் இலக்கம் 2026450 கணக்குக்கு / *மக்கள் வங்கி யூனியன் பிளேஸ் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச்செயலாளரின் இலக்கம் 014-1-001-3-0110432 கணக்குக்கு செலவுவைத்து வரவுத்தாளொன்றினை எனக்கு வழங்கவும்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,

| | |
|---|---|
| கணக்காளர் / பிரதிப் பணிப்பாளர் (நிதி)<br>அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக | பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி)<br>அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக |
| திகதி :- .................................. | திகதி :- ........................................ |

பிரதி: பணிப்பாளர் நாயகம்
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
பொதுத் திறைசேரி,
கொழும்பு 01.

} தயவுசெய்து காசுப் புத்தக மீதியினை கட்டுநிதிக் கணக்கு இலக்கம் :- 7002/0/0/…../ க்கு செலவு வைக்கவும். (அத்தாட்சிப் படுத்திய வரவுத்தாளின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

* தேவையற்ற பகுதிகளை வெட்டிவிடவும்.

படிவம் : TOD/IMP/07

எனது இலக்கம் :- ……………………

திகதி :- ………………………………

முகாமையாளர்,
இலங்கை வங்கி/மக்கள் வங்கி.

ஐயா,

**20 .12.31 அன்று காசுப்புத்தகத்தினை மூடி மீதியினை திறைசேரிக்கு திருப்பியனுப்புதல் நடைமுறைக் கணக்கு இலக்கம்…………..**

அமைச்சு/திணைக்களம்/மாவட்டச்செயலகம் :- …………………………………………
கருத்திட்டம்:
கட்டுநிதிக் கணக்கு இலக்கம் - 7003/0/0/…../…..

20 .12.31 அன்று இவ்மைச்சின் /திணைக்களத்தின் /மாவட்டச்செயலாளர் அலுவலகத்தின் காசுப்புத்தகதிற்கு ஏற்ப மீதியாகவுள்ள ரூபா …………………வினை *இலங்கை வங்கி தப்பிரபேன் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச்செயலாளரின் இலக்கம் 2026450 கணக்குக்கு / *மக்கள் வங்கி யூனியன் பிளேஸ் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச்செயலாளரின் இலக்கம் 014-1-001-3-0110432 கணக்குக்கு செலவுவைத்து வரவுத்தாளொன்றினை எனக்கு வழங்கவும்.

இப்படிக்கு,
நன்றியுள்ள,

**நிதி முகாமையாளர்**/கருத்திட்ட கணக்காளர்
திட்டப் பணிப்பாளருக்கு பதிலாக

திகதி :- ………………………………

: திட்டப் பணிப்பாளர்
அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக

திகதி :- …………………………………

பிரதி: பணிப்பாளர் நாயகம்
கடன்சேவைகள் மற்றும் கணக்கீடுகள் பிரிவு
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
பொதுத் திறைசேரி,
கொழும்பு 01.

தயவுசெய்து காசுப் புத்தக மீதியினை கட்டுநிதிக் கணக்கு இலக்கம் :- 7003/0/0/…../ க்கு செலவு வைக்கவும். (அத்தாட்சிப் படுத்திய வரவுத்தாளின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

**பிரதி:** அமைச்சின் செயலாளர் தகவல்களுக்காக

* தேவையற்ற பகுதிகளை வெட்டிவிடவும்.